செ.வெ.எண்.357 நாள்.04.06.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் 45 பயனாளிகளுக்கு ரூ.33.56 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் அவர்கள் தலைமையில் இன்று (04.06.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கடல் கடந்த இந்தியர் இறப்பிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் இராதாபுரம், கண்ணன்குளத்தைச் சார்ந்த நாகராஜ் என்பவரின் மனைவி தமிழ்செல்வியிடம் ரூ.1,91,594/–த்திற்கான காசோலையினையும், கடையநல்லூர், இடைக்கால் சேர்ந்த மாரியப்பன் என்பவரின் மனைவி சுப்புலெட்சுமியிடம் ரூ.9,57,257/–த்திற்கான காசோலையினையும், பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 20 பயனாளிகளுக்கு தலா ரூ.32,400/– மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், சமூக நலத்துறையின் மூலம் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு தலா ரூ.12,000/– மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களையும், தமிழ்நாடு மாநில நோயாளர் நல நிதி வழங்கும் திட்டத்தின் கீழ் தலா ரூ.25 ஆயிரம் வீதம் 3 பயனாளிகளுக்கு நிதியுதவிகளையும், ஒரு பயனாளிக்கு ரூ.5 ஆயிரத்திற்கான நிதியுதவியினையும், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் பழங்குடியினர் நல வாரிய அட்டை மூலம் முதியோர் ஓய்வூதியத் தொகையாக தலா ரூ.12,000/–வீதம் 2 பயனாளிகளுக்கு உதவித் தொகைகளையும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒரு பயனாளிக்கு தீருதவி உதவித் தொகை (ECS மூலம்) ரூ.75 ஆயிரத்திற்கான உதவித் தொகையினையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் சேரன்மகாதேவி வட்டத்தைச் சார்ந்த 11 பயனாளிகளுக்கு தலா 2 சென்ட் வீதம் மொத்தம் ரூ.13.20 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், ஆக மொத்தம் 45 பயனாளிகளுக்கு ரூ.33.56 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், உதவி ஆணையர் (கலால்) திரு.பழனிக்குமார், திருநெல்வேலி வட்டாட்சியர் திரு.கந்தசாமி, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.இந்திரா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.